## ஒதுக்கீட்டு தலைப்பு 260 மாவட்டச் செயலகம்
## நுவரெலியா மாவட்ட செயலகத்தினதும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களினதும் கணக்குகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2010 ஆம் ஆண்டு

### 1. மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

i மாவட்டத்தின் தலைமை நிர்வாக நிலையமாக செயற்படுதல்

ii மாவட்டத்தில் சமய மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்

iii மாவட்டத்தினுள் நிரந்தரமான அபிவிருத்தியை நோக்கி செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

iv தேசிய கொள்கைகளுக்கு அமைவாக மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுத்தல்

v பிரதேச செயலகங்களின் மேற்பார்வை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுத்தல்

vi பதவியணிக்கான பயிற்சியும் அபிவிருத்தியும்

vii மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்

viii வெவ்வேறு அமைச்சு மற்றும் திணைக்களங்களினூடாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்

ix துப்பாக்கிகள் மற்றும் வெடி பொருட்களுக்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல்

x பிரதேச செயலகத்தினதும் மாவட்ட செயலகத்தினதும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

xi சொத்துக்களின் பொறுப்பினையும் கட்டுப்பாட்டினையும் உறுதிப்படுத்துதல்

xii தேசிய மட்டத்தில் உற்சவங்களை ஒழுங்கமைத்தல்

### 2. மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

i. நுவரெலியா

ii. அம்பகமுவ

iii. வலப்பனை

iv. கொத்மலே

v. ஹங்குரன்கெத்த

## 3 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று நிதியாண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4 கணக்குகள்

### 4.1 மொத்த நிதி ஏற்பாடும் செலவினங்களும்

நுவரெலியா மாவட்ட செயலகத்திற்கும் அதன் கீழான 5 பிரதேச செயலகங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 363,100,000 தொகையாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 309,296,662 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் தேறிய சேமிப்புக்கள் ரூபா 53,803,338 ஆக இருந்ததுடன், அது மொத்த தேறிய ஏற்பாட்டில் நூற்றுக்கு 15% ஆக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவினத்தின் தன்மை | வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் நிதிஏற்பாடு | மொத்த தேறிய நிதிஏற்பாடு | உள்ளவாறான செலவினம் (2010 திசெம்பர் 31 இல்) | சேமிப்புக்கள் (2010 திசெம்பர் 31 இல்) | சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | % |
| மீண்டுவருபவை | 243,450,000 | 243,450.000 | 234,558,250 | 8,891,750 | 3.65 |
| மூலதனம் | 119,650,000 | 119,650,000 | 74,738,412 | 44,911,588 | 37.53 |
| மொத்தம் | 363,100,000 | 363,100,000 | 309,296,662 | 53,803,338 | |

### 4.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

(i) வெவ்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றிடமிருந்து கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ரூபா 1,520,195,189 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினத் தலைப்பு | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | கிடைக்கப் பெற்ற நிதி ஏற்பாடுகள் | உள்ளவாறான செலவினம் | சேமிப்புக்கள் (2010 திசெம்பர் இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 002 | பிரதமர் அலுவலகம் | 3,125 | - | 3,125 |
| 101 | புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு | 200,000 | 194,000 | 6,000 |
| 103 | அரச பாதுகாப்பு அமைச்சு | 230,379 | 222,369 | 8,010 |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 917,674,953 | 640,723,333 | 276,951,620 |
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 5,719,860 | 5,391,538 | 328,322 |
| 110 | நீதி அமைச்சு | 1,082,500 | 609,562 | 472,938 |
| 116 | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 261,686 | 261,686 | - |
| 118 | கமநல சேவை அமைச்சு | 157,000 | 107,500 | 49,500 |
| 120 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு | 19,662,110 | 16,904,512 | 2,757,598 |
| 121 | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 4,040,214 | 2,865,585 | 1,174,629 |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 2,146,910 | 1,992,980 | 153,930 |
| 127 | தொழிலுறவுகள் மற்றும் உற்பத்திதிறன் மேம்பாட்டு அமைச்சு | 132,000 | 96,777 | 35,223 |
| 133 | தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 3,929,539 | 2,764,884 | 1,164,655 |
| 134 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு | 32,250 | 20,340 | 11,910 |
| 140 | கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 157,035 | 67,835 | 89,200 |
| 145 | மீள்குடியேற்ற அமைச்சு | 590,260 | 112,051 | 478,209 |
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 21,764,576 | 21,746,368 | 18,208 |
| 156 | இளைஞர் விவகார அமைச்சு | 1,422,851 | 1,407,407 | 15,444 |
| 160 | சுற்றாடல் அமைச்சு | 400,000 | 316,400 | 83,600 |
| 173 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 1,575,000 | 1,357,000 | 218,000 |
| 201 | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 5,579,995 | 5,313,697 | 266,298 |

| | | | | |
|---|---|---|---|---|
| 204 | இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | 700,000 | 668,838 | 31,162 |
| 206 | கலாசார அலுவல்கள் திணைக்களம் | 3,750 | 3,520 | 230 |
| 216 | சமூக சேவைத் திணைக்களம் | 1,040,295 | 958,095 | 82,200 |
| 217 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம் | 1,806,755 | 1,693,967 | 112,788 |
| 218 | சமூர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 279,709,995 | 248,115,557 | 31,594,438 |
| 219 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | 7,500,000 | 7,479,342 | 20,658 |
| 226 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 6,660 | 6,615 | 45 |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் | 354,394 | 56,851 | 297,543 |
| 252 | தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் | 1,477,877 | 969,865 | 508,012 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 239,973,546 | 230,107,841 | 9,865,705 |
| 254 | பதிவாளர் நாயகத் திணைக்களம் | 546,128 | 540,788 | 5,340 |
| 282 | நீர்ப்பாசனத் திணைக்களம் | 100,000 | - | 100,000 |
| 286 | காணி ஆணையாளர் திணைக்களம் | 28,010 | 24,825 | 3,185 |
| 307 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம். | 335,000 | 241,797 | 93,203 |
| | மொத்தம் | 1,520,425,568 | 1,193,392,394 | 327,033,174 |

(ii) பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 14,318,535 தொகையான நிதிஏற்பாட்டின் கீழ், நுவரெலியா மாவட்டத்தின் நிர்மாணிப்புக்கள் பூர்த்தி செய்யப்படாத இந்து சமய ஸ்தலங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக பகிர்ந்தளிக்கும் பொருட்டு 50 கி.கிராம் அளவிலான 2810 சீமேந்து மூடைகளுக்காக ரூபா 2,065,350 தொகையும் 3660 லீற்றர் வர்ணப் பூச்சுக்காக ரூபா 1,658,301 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு பரிசோதனை தினமான 2011 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் கொடுப்பனவு செய்யப்பட்டு முறையே 425 மற்றும் 152 நாட்கள் கடந்திருந்த போதும் அவ் இருப்புக்களை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நுவரெலியா மாவட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத இந்து சமய ஸ்தலங்களுக்கு வழங்குவதற்காக பகிர்ந்தளிக்கும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த சீமேந்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் முழுமையாக நிர்மாணப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 05 இந்து சமய ஸ்தலங்களுக்காக ரூபா 404,250 பெறுமதியான 550 சீமேந்து மூடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட எழுத்து மூல கூற்றின் பிரகாரம் அச்சீமேந்து இருப்பு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(iv) நுவரெலியா மாவட்டத்தின் 4 பிரதேச செயலகங்களின் அதிகாரப் பிரதேசங்களில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத 31 இந்து சமய ஸ்தலங்களுக்கான வழங்கப்பட்டிருந்த ரூபா 1,694,175 தொகை பெறுமதியான 2345 சீமேந்து மூடைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அப்பொருட்கள் பயன்படுத்தாத நிலைமையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அவ் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட ஏனைய 12 இந்து சமய ஸ்தலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாதிருந்த ரூபா 490,245 பெறுமதியான 660 சீமேந்து மூடைகள் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காலாவதியாகி கோவில் வளவில் காணப்பட்டது.

(v) 2001 யூலை 17 ஆம் திகதிய மத்திய மாகாண இறைவரி ஆணையாளரின் மத்திய மாகாண இறைவரிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2001 இன் பிரகாரம் அபிவிருத்தி திட்டங்களுக்குரிய சீமேந்து கொள்வனவிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 55,271 தொகையான விற்பனைப் புரள்வு வரி அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் 2009 திசெம்பர் 29 ஆம் திகதிய 1170 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டு மூலம் 105-2-11-3-2502 செலவின் விடயத்தின் கீழ் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்த பிரிகர அங்கி கொள்வனவிற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 210,525 தொகையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,526 நிறுத்தி வைத்தல் வரியை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டிற்கான ரூபா 3,000,000 நிதிஏற்பாட்டின் கீழ் நுவரெலியா மாவட்டத்தின் 28 சமய நிலையங்களின் நிர்மாணம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு சமய தாபனத்திற்காக ரூபா 100,000 வீதம் 8 நிலையங்களுக்காக ரூபா 800,000 தொகையான நிதிஏற்பாட்டை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 527,830 பெறுமதியான சீமேந்து மற்றும் வர்ணப் பூச்சு என்பவை அதற்குரிய பகிந்தளிப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(viii) 2009 ஆம் ஆண்டின் போது வெவ்வேறு சங்கங்களுக்கு 105-2-11-3-2502 செலவின விடயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 666,450 பெறுமதியான இசைகருவி பொருட்கள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் என்பவற்றை 2010 திசெம்பர் 20 ஆம் திகதி வரையில் குறித்த சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்காமல் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ix) 2009 ஆம் ஆண்டின் நிதிஏற்பாட்டின் கீழ் பிளாஸ்டிக் கூடைகளின் பாவனையை பிரசித்திப்படுத்துவதற்காக 105-2-11-3-2502(1) செலவின விடயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 6063 பிளாஸ்டிக் கூடைகளுக்காக ரூபா 1,999,960 தொகை 2009 நவம்பர் 18 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் கணக்காய்வு தினமான 2010 திசெம்பர் 15 ஆம் திகதி வரை ரூபா 861,610 பெறுமதியான 2639 பிளாஸ்டிக் கூடைகளை பிரதேச செயலகங்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் மாவட்ட செயலக வளவில் காணப்பட்டதுடன், ரூபா 270,900 பெறுமதியான 903 கூடைகளுக்கு 2009 திசெம்பர் 28 ஆம் திகதி குறித்த நிறுவனத்திற்கு பணம் செலுத்தப்பட்டிருந்த போதும் அவ் இருப்பு 2010 திசெம்பர் 15 ஆம் திகதி வரை கிடைத்திருக்கவில்லை.

(x) 2007 மார்ச் 26 ஆம் திகதி 01 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் ‘‘கமநெகும ஜாதிக சவிய கணக்கு அறிவுறுத்தல் இல 01 சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்வாக செலவினத்தை உரிய செயற்திட்ட மேற்பார்வைக்கு புறம்பான செயற்பாடுகளுக்கும் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும் பயன்படுத்தக்கூடாது என தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அந்நியதிகளுக்கு முரணாக 105-2-11-3-2502 செலவின விடயத்தின் கீழ் தோட்ட வீதிகளை அபிவிருத்தி செய்வற்காக வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 513,121 தொகையைப் பயன்படுத்தி மூலதன உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 4.3 கணக்காய்வும் கணக்காய்வின் நோக்கெல்லையும்

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 08 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 4.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் அல்லது இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்புக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4.5 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களின் நிலைமை இவ் அறிக்கையின் (அ) முதல் (ஊ) காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்களும் 4.6 முதல் 4.13 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) <u>கணக்குகளைச் சமர்ப்பித்தல்</u>

i. மாவட்ட செயலகத்தினால் 2011 மார்ச் 31 வரையில் கீழே காட்டப்பட்டுள்ள கணக்குகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு | கணக்கின் பெயர் |
|---|---|
| 260 | ஒதுக்கீட்டுக் கணக்கு |

(ii) மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பராமரிக்கப்படாதிருந்ததுடன், சில ஏடுகள் முறையாகவும் நாளது வரையாக்கப்பட்டும் பராமரிக்கப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| ஏடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| பிணை வைப்பு | நி.பி 891 | ஏடுகள் பராமரிக்கப்படவில்லை |

(iii) மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட 06 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட 01 கணக்காய்வு ஐய வினாவிற்கும் 2011 மார்ச் 31 வரையில் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) <u>பாதீட்டு முரண்கள்</u>**

i. தலைப்பு 260 இன் கீழ் செலவின விடயமொன்றிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 400,000 தொகையான முழு தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

ii. 18 செலவின விடயங்களுக்குரித்தாக ரூபா 48,119,907 தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், அச்சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டின் 12% முதல் 87% இற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

(i) நுவரெலியா மாவட்ட செயலகத்திற்கும் 05 பிரதேச செயலகங்களுக்கும் உரிய 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 25,752,679 தொகையான 245 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நுவரெலியா மாவட்ட செயலகத்திற்கு ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வெவ்வேறு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 335,872 தொகை, உரிய செயற்பாடுகளை நிறைவேற்றாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

26001 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான 2010 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதி வரை அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 670,970 ஆக இருந்ததுடன், அந்நிலுவையை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 4.6 சொத்து முகாமைத்துவம்

**(அ) பயன்படுத்தாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுமிருந்தமை தெரிவுக் கணக்காய்வுத் பரிசோதனை களின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்தின் தன்மை | அலகுகளின் எண்ணிக்கை | செயற்படாத அல்லது குறைப்பயன் பாட்டிற்குட்பட்ட காலப்பகுதி ஆண்டு | உரிய மாவட்ட செயலகம் /பிரதேச செயலகம் |
|---|---|---|---|
| வாகனங்கள் | 04 | 02 ஆண்டுகள் | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகம் |
| வாகனங்கள் | 04 | 06 - 14 ஆண்டுகள் | வலப்பனை பிரதேச செயலகம் |
| டிரேல் ஸ்டேன்ட் | 01 | 02 ஆண்டுகள் | நுவரெலியா பிரதேச செயலகம் |
| Bosch வகையிலான டிரேல் (2800 வொட்) | 01 | 02 ஆண்டுகள் | - மேற்படி - |
| உள்ளகத் தொலைபேசிகள் | 272 | 02 ஆண்டுகள் | மாவட்ட செயலகம் |
| நிழற்பட பிரதி இயந்திரம் | 01 | 02 ஆண்டுகள் | - மேற்படி - |
| Toshiba வகையிலான கணனி | 01 | 02 ஆண்டுகள் | - மேற்படி - |
| ஓவர் ஹெட் புரோஜெக்டர் | 01 | 02 ஆண்டுகள் | நுவரெலியா பிரதேச செயலகம் |

## (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

மாவட்ட செயலகத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்களின் வகை | சொத்துக்கின் அலகுகளின் எண்ணிக்கை | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) காணி | 01 | தொழிற் பயிற்சி அதிகாரசபை | 16,000,000 | 2007 முதல் |
| (ii) கட்டிடங்கள் | 02 | மத்திய மாகாண சபை<br>தொழிற் பயிற்சி அதிகாரசபை | கண்டுபிடிக்க முடியவில்லை | 2010 முதல் |

**(இ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள்**

மாவட்ட செலயகத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு என்பவற்றினால் தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 78,189 ஆக இருந்ததுடன், அப்பொறுப்புக்கள் ஓராண்டிற்கு குறைந்த காலப்பகுதியதாக இருந்தது.

(ஈ) நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் 1994 முதல் 2007 ஆம் ஆண்டு வரை பராமரிக்கப்பட்டு வந்த இருப்புப் பதிவேட்டினைப் பரிசோதித்த போது 12 விடயங்களுக்குரிய 345 அலகுகள் மிகையாகவும் 19 பொருள் விடயங்களுக்குரிய 538 அலகுகள் பற்றாக்குறையாகவும் காணப்பட்டன.

(உ) நுவரெலியா மாவட்ட செயலகத்தில் மீளாய்வாண்டின் போது களஞ்சியத்தில் பராமரிக்கப்பட்டு வந்த பழைய இருப்புப் பதிவேட்டுடன் புதிய களஞ்சியப் பொறுப்பாளருக்கு வழங்கிய எழுதுகருவி மீதியை ஒப்பிட்ட போது 04 உருப்படிகளுக்குரிய 578 அலகுகளில் மிகையும் 07 உருப்படிகளுக்குரிய 2599 பொருள் அலகுகளில் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டன.

(ஊ) நுவரெலியா மாவட்ட செயலகத்தின் இருப்புப் பொருட்களை பரிசோதனை செய்யும் போது 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 70,000 பெறுமதியான கூடாரங்களை 2010 ஏப்ரல் 23 ஆம் திகதி வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2011 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அவ்வுபகரணங்களை திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை.

**4.8 இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (i) தாபன விதிக்கோவை | | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | 51,102 | செயலாளரின் அனுமதி அல்லது வாடகையை நிர்ணயிப்பதற்கு முன்னர் பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கையைப் பெற்றுக்கொள்ளாமல் ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த அரசாங்க விடுதிக்காக ரூபா 600 தொகையான வாடகையாக அறவிடப்பட்டுவந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் | | |
| நி.பி 104(1) | 28,000 | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தில் 2009 ஆம் ஆண்டில் காணாமல் போன டிஜிடல் வகையிலான கெமராவிற்காக 25% அரசாங்க கட்டணத்துடன், பொறுப்பான தரப்பினரிடமிருந்து அதற்குரிய நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அந்நட்டம் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப் பட்டிருந்து. |
| நி.பி 104(3) | 320,150 | அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குரிய வாகனமொன்று விபத்திற்குட்பட்ட மையால் ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக ஆரம்ப அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பொறுப்பு வாய்ந்தவர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிடு |

| | | |
|---|---|---|
| | | வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 115(ஆ) | 15,715 | நுவரெலியா மாவட்ட செயலகத்தின் முன்னைய ஆண்டிற்குரிய கொடுப்பனவு தொடர்பாக கணக்களிப்பு உத்தியோகத்தரிடம் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| நி.பி 137 | 714,182 | நுவரெலியா மாவட்ட செயலகத்தில் 08 சந்தர்ப்பங்களின் போது அங்கீகரிக்கப்படாத 08 கொடுப்பனவு உறுதிசீட்டுக்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| நி.பி 245(1) | 1,322,155 | நுவரெலியா மாவட்ட செயலகத்தினதும் பிரதேச செயலகமொன்றினதும் சான்றுறுதிப்படுத்தப்படாத 10 உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| நி.பி 237(அ) | 334,137 | பொருட்கள் கிடைக்கப் பெற்றதாக சான்றிதழொன்று பொருட் பதிவேட்டில் இணைக்கப்பட வேண்டிய போதிலும், ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தினால் எழுதுகருவிகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது இருப்புச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 371 | 589,214 | நுவரெலியா மாவட்ட செயலகத்தின் பதவிநிலைத் தரமல்லாத 05 உத்தியோகத்தர்களுக்கு துணைக் கட்டுநிதி விநியோகிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| நி.பி 371(2)(இ) | 2,254,573 | பெற்றுக் கொள்ளப்பட்ட துணைக்கட்டு நிதியை அச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்ட உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் அவ்வாறான மீள்நிரப்பல்கள் 03 நாட்கள் முதல் 214 வரை தாமதிக்கப்பட்டிருந்தன. |
| நி.பி 571 | 7,023,334 | 02 பிரதேச செயலகங்களுக்குரிய 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 119 பொது வைப்புக்கள் மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 751 | 601,096 | அரசாங்க திணைக்களங்களுக்கு கிடைக்கும் சகல பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், நுவரெலியா மாவட்ட செயலகத்தினாலும் பிரதேச செயலகம் ஒன்றினாலும் 04 சந்தர்ப்பங்களில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 780 | 2,023,000 | நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் முன்னைய 02 ஆண்டுகளிலும் ரூபா 4,597,456 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கையில் மீண்டும் 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,023,000 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களை ஏனைய உப அலுவலகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 10 மாதங்களாக அலுவலக வளவில் வைக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| நி.பி 1646 | - | வலப்பனை பிரதேச செயலாகத்தினால் 2010 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய வாகனமொன்றிற்கான நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| அ. 1993 ஒக்தோபர் 07 ஆம் திகதிய ஈ/2/பிணை ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் செயலாளரின் சுற்றறிக்கை | மாவட்ட செயலகத்தின் பல்வேறு தரங்களுக்குரிய 10 உத்தியோகத்தர் களினாலும் பிரதேச செயலகங்களுக்கு உரித்தான 22 உத்தியோகத்தர் களினாலும் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| ஆ. 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சின் சுற்றறிக்கை | 05 ஆண்டுகளில் ஒரே சேவை நிலையத்தில் கடமை புரிந்துள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 11 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. |
| இ. 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிர்வாக முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு செயலாளரின் பொது நிர்வாகச் சுற்றறிக்கை கடிதம் | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தில் 02 வாகனங்களுக்கு அரச இலட்சினை மற்றும் பிரதேச செயலகத்தின் பெயர் என்பன பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iv) திறைசேரி சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2002 நவெம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | இரண்டு பிரதேச செயலகங்களின் 46 கணனிகளுக்காக நிலையான சொத்துப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (v) 2003 திசெம்பர் 02 ஆம் திகதிய 1/2003 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் மற்றும் அரச சேவை சேமலாப நிதிய முகாமைச் சபையின் தலைவரின் 1/2003 ஆம் இலக்க அரச சேவை சேமலாப நிதியச் சுற்றறிக்கை | 36,574 | நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2008 மே முதல் சேவையிலீடுபட்டுள்ள அமைய சாரதிக்காக அரச சேவை சேமலாப நிதிய பங்களிப்புத் தொகையை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) 2004 ஒக்தோபர் 20 ஆம் திகதிய ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல். | 3,750,000 | அம்பகமுவ பிரதேச செயலாளரினால் 2005 பெப்ரவரி 02 ஆம் திகதி கையேற்கப்பட்ட 04 தனியார் காணித் துண்டுகளுக்காக 2010 ஆம் ஆண்டில் காணிகளில் மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் அதற்குரிய இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அக்காணிகளின் எல்லைகள் குறிக்கப்படாதிருந்ததுடன், அக்காணி களுக்குரிய தேயிலை வருமானம் அரச வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

**(ஆ) வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) **நிறுத்தி வைத்தல் வரி**

(அ) நுவரெலியா மாவட்ட செயலகத்தினாலும் பிரதேச செயலக மொன்றினாலும், 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் ரூபா 48,227 தொகையான நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு மாதத்திற்கான மொத்த நிறுத்தி வைத்தல் வரி அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், நுவரெலியா மாவட்ட செயலகத்தினது 2010 திசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 322,278 தொகையான வரித்தொகையை 2011 ஏப்ரல் 12 ஆம் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) **புரள்வு வரி**

நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களுக்குரித்தான 2001 யூலை 17 ஆம் திகதிய மத்திய மாகாண இறைவரிச் சுற்றறிக்கையின் 03.1 ஆம் பிரிவின் கீழ் அறவிடப்பட்ட ரூபா 26,722 தொகையான புரள்வு வரியை மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தலின் குறைபாடுகள்

(அ) வங்கி கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதிலான நீண்ட தாமதம்

வலப்பனை பிரதேச செயலகத்தின் வங்கி கணக்கிற்குரிய வங்கி கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதில் நீண்ட தாமதம் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| வங்கிக் கணக்கு | 2011 மார்ச் 31 ஆம் திகதி வரையில் தயாரிக்கப் படாதிருந்த வங்கி கணக்கிணக்க கூற்றுக்களுக்குரிய ஆண்டு/ மாதம் |
|---|---|
| வங்கிக் கணக்கு (i) | 2009 சனவரி முதல் 2010 பெப்ரவரி வரை |

(ஆ) சீராக்கம் செய்யப்பட வேண்டிய நிலுவை

2010 திசெம்பர் மாதத்திற்காக மாவட்ட செயலகத்தினாலும் 05 பிரதேச செயலகங்களினாலும் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காணப்பட்ட சீராக்கம் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | காலப்பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|
| சீராக்கம் தொடர்பான தகவல்கள் | | 6 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டிற்கு கீழானவை | 1 ஆண்டிற்கு மேற்பட்ட 3 இற்கு கீழானவை | மொத்தம் |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (ii) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்கு முன் வைக்கப்படாத காசோலைகள் | 51,741 | 28,300 | 80,041 |

(இ) கொத்மலை பிரதேச செயலகத்தினால் ரூபா 1,619,088 பெறுமதியான 06 காசேலைகளை குறித்த பெறுனர்களுக்கு வழங்கப்படாமல் 3 மாதமாக வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

## 4.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டது. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறை களிலிருந்து விலகுதல்

I நுவரெலியா மாவட்ட செயலக கட்டிடத்திற்கும் அதனைச் சூழவுள்ள வளவிற்காகவும் 2010 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு சேவைகளை வழங்கும் பொருட்டு தனியார் கம்பனியொன்றிற்கும் நுவரெலியா மாவட்ட செயலாளருக்கும் இடையே 2009 செப்தம்பர் 23 ஆம் திகதி ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டிற்காக ரூபா 1,079,730 தொகை கொடுப்பனவு செய்ய முடியுமான போதிலும், அதற்காக ரூபா 1,719,570 தொகை கொடுப்பனவு செய்தமையால் மேற்குறித்த உடன்படிக்கைக்கு முரணாக ரூபா 639,840 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

I நுவரெலியா மாவட்ட செயலாலளர் குடியிருக்கும் அரச விடுதிக்காக அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதும், அதன் பாவனைக்காக செலவினத் தலைப்பு 260 இன் கீழ் நிழற்பட பிரதி இயந்திரமொன்றிற்காக ரூபா 107,142 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

II 1994 மே 03 ஆம் திகதிய பீசீபீ/360/239 ஆம் இலக்க தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பிரதேச செயலாளருக்கான அரச விடுதிக்காக, அரசாங்க நிதியிலிருந்து வீட்டுத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக திறைசேரி இணக்கப்பாடு இல்லையென தெரிவிக்கப்பட்டிருந்த போதும், 2010 ஆம் ஆண்டிற்காக அரச நிதியிலிருந்து வலப்பனை பிரதேச செயலாளர் குடியிருக்கும் வீட்டிற்காக ரூபா 37,165 பெறுமதியான கட்டிலொன்றும் மெத்தையொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், கொத்மலை பிரதேச செயலாளர் குடியிருக்கும் வீட்டிற்காக ரூபா 15,350 பெறுமதியான வெகும் கிளீனர் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### (இ) அத்துமீறிய குடியிருப்பிற்காக இடமளித்தல்

இலங்கை மஹவெலி அதிகாரசபையினால் பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ருவன்புர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அலகு முகாமைத்துவ அலுவலக கட்டிடத்தின் ஒரு பகுதியில் 22 வருடங்களாக அத்துமீறிக் குடியிருக்கும் அரச பாடசாலையொன்றின் ஆசிரியரிடமிருந்து வீட்டு வாடகையை அறவிடவோ அல்லது உரித்தை பொறுப்பேற்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.10 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்ட செயலகக் கட்டிடச் சூழலில் அமைந்துள்ள ஏனைய 17 அரச நிறுவனங்களுக்குரிய மின்சாரம், நீர்ப் பாவனை உட்பட ரூபா 1,169,789 தொகை பெறுமதியான பட்டியலுக்காக மீளாய்வாண்டின் போது 260-1-1-0-1103 செலவினத் தலைப்பிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனங்களிடமிருந்து குறித்த தொகை மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 4.11 செயற்பாட்டு வினைத்திறனின்மை

i. பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 531,059 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த விளையாட்டு உபகரணங்கள், வீட்டுத் தளபாடங்கள் மற்றும் கூரைத் தகடுகள் என்பன பகிர்ந்தளிக்கப்படாமல் 04 பிரதேச செயலகங்களின் களஞ்சிய வளவில் வைக்கப்பட்டிருந்தது.

ii. வலப்பனை பிரதேச செயலகத்திற்கு இந்திய கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராம மற்றும் நகரங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 8,782,859 பெறுமதியான 8,600 கல்வனயிஸ் கூரைத் தகடுகள் மற்றும் 1196 தட்டைத் தகடுகள் பகிர்ந்தளிக்கப்படாமல் இருந்ததுடன், அதில் ரூபா 268,170 பெறுமதியான 292 கூரைத் தகடுகள் 2009 ஆம் ஆண்டின் போது காணாமல் போயிருந்தன.

iii. கொத்மலை பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் ஓய்வூதிய பணிக்கொடைத் தொகையான ரூபா 111,925 ஐ 2009 சனவரி 09 ஆம் திகதி முதல் 2011 பெப்ரவரி 20 ஆம் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4.12 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள்

மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் 2010 திசெம்பர் 31 இல் இருந்தபடியான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று மட்டம் | 28 | 21 | 07 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 59 | 56 | 03 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 662 | 569 | 93 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 78 | 68 | 12 | 02 |
| (v) | ஏனையவ | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 827 | 716 | 115 | 04 |

## 4.13 உள்ளகக் கட்டுப்பாடு

(அ) உள்ளகக் கணக்காய்வு

மாவட்ட செயலகத்திற்குரிய உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுவை செயற்படுத்தல்

1999 நவம்பர் 19 ஆம் திகதிய பீஎப்/பீஈ/3 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிசார் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.